# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 வைகாசி 06 வியாழக்கிழமை (20-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 15


# வவுனியா நகரம் முற்றாக ஸ்தம்பிதம்

## ரெலோ தளபதி குகனின் இறுதிக் கிரியை நேற்று

வவுனியா, மே 20

கடந்த சனிக்கிழமை மாலை பம்பலப்பிட்டியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட ரெலோ அமைப்பின் வவுனியாத் தளபதி குகனின் இறுதிக் கிரியைகள் நேற்று வவுனியாவில் நடைபெற்றன. இதனையொட்டி வவுனியா நகரம் நேற்று முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

உணவு விடுதிகள் உட்படக் கடைகள் அனைத்தும் வவுனியாவில் நேற்று மூடப்பட்டிருந்தன: நகரின் வாகனப் போக்குவரத்தும் முற்றாக நிறுத்தப்பட்டிருந்தது. மாணவர் வரவு இன்மையால் பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடந்தன.

எனினும் அரசாங்க அலுவலகங்கள் இயங்கியதாக வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்தார்.

கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்ததால் இராணுவக்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## கிரனேட் வெடிப்பு சம்பவம்

மீசாலை மேற்கு — ஸ்ரீ வில்வரத்தி பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள வயல் கரைப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் பெண் சிப்பாய் பலி

துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் பெண் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் பொலன்னறுவை மாவட்டம்—வெலிக்கந்த இராணுவ முகாமில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (இ-7-21)

## புளொட் மற்றும் ரெலோ இயக்கங்கள் கொலைகளை நிறுத்த வேண்டும்

### டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

கொழும்பு, மே 20

புளொட் இயக்கமும் ரெலோ இயக்கமும் அர்த்தமற்ற கொலைகளை உடன் நிறுத்தி தமக்கிடையேயுள்ள கருத்து வேறுபாடுகளை ஜனநாயக முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும்;

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம்.பி. யுமான டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஜனநாயக வழிக்கு தாம் திரும்பி விட்டதாகக் கூறிக்கொள்ளும் புளொட், ரெலோ

[9 ஆம் பக்கம் பார்க்க]

## தப்பி ஓடிய இளைஞனை நோக்கி படையினர் சூடு!

### சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி, மே 20

படையினரைக் கண்டுவிட்டு தப்பியோடிய இளைஞர் ஒருவரை துரத்திச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்த படையினர் மீது கிரனேட் வீசப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் சாவகச்சேரி வடக்கு இருவத்திப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம் பெற்றது

தம்மைக் கண்டுவிட்டு தப்பி ஓடிய இளைஞனை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவாறு படையினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மின்கம்பம் விழுந்து ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், மே, 20

வீதியில் மின் இணைப்பு பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது மின் தூண் ஒன்று தவறுதலாக வீழ்ந்ததில் அந்த இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார் மேலும் ஒருவர் காயமடைந்தார்.

புத்தூர்—சங்கானை வீதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மின் இணைப்பு பணிகளுக்காக மின்கம்பம் ஒன்றை தூக்கி நிறுத்தும் பணியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர், பாஷையூர் மீனவர்கள் நேற்றுத் தொழிலுக்கு செல்ல மறுப்பு

யாழ்ப்பாணம், மே 20

யாழ். கடலேரிப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் குருநகர், பாசையூர் ஆகிய பகுதிகளைசேர்ந்தமீனவர்கள் எவரும் நேற்று தொழிலுக்குச் செல்லவில்லை:

கடலேரிப் பகுதியில் மீன்பிடிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட கடல் எல்லை குறைக்கப்பட்டதை அடுத்து மீனவர்கள் நேற்று மீன்பிடிக்கச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கென அனுமதிக்கப்பட்டிருந்த தூரம் நேற்று முன்தினம் முதல் அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும்—

குறிப்பிட்ட பகுதிக்குள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடமுடியாது என்றும்— கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்:

( 2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் கொலை அட்டை: கிரிக்கெட் மைதானத்தை வட்டமிட்ட விமானம்!

லண்டன், மே 20

இங்கிலாந்தில் நேற்று இலங்கை — தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையே நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது "தமிழர்கள் கொலை; கிரிக்கெட் வேண்டாம்" என்ற வாசகம் தாங்கிய சிறிய விமானம் ஒன்று மைதானத்தைச் சுற்றிப் பறந்தது.

இங்கிலாந்தின் நோர்தம்ரன் மைதானத்தில் மேற்படி ஆட்டம் நடைபெற்றது. இலங்கை அணி துடுப்பெடுத்தாடிய பின்னர் களமிறங்கி தென்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைக் கடலுக்கு சென்ற 20 முஸ்லிம் மீனவர் கரை திரும்பவில்லை

மட்டக்களப்பு, மே 20

திருகோணமலை கடலில் நேற்று முன்தினம் தொழிலுக்குச் சென்ற 20 முஸ்லிம் மீனவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருமலைக் கடலில் கடற்படையினரால் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் "தங்கை" கடற்பகுதியில் இவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் எனவும்—

இதன் பின்பே இவர்கள் காணாமல் போய்விட்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினரால் தொழிலுக்கென தடை விதிக்கப்பட்ட பகுதியில் இவர்கள் தொழில் செய்ததால் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் அல்லது இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாக திருமலைச் செய்திகள் தெரிவித்தன: (இ-7-21)

## லங்கா முடித்த நாளை திருமலை புறப்படும்

யாழ்ப்பாணம், மே 20

காங்கேசன்துறையில் இருந்து நாளை வெள்ளிக்கிழமை காலை திருமலை நோக்கிப் புறப்படவுள்ள லங்கா முடித்த கப்பலில் பயணம் செய்வதற்காக ரிக்கெட் பெற்றவர்களை இன்று வியாழன் நண்பகல் 12.00 மணிக்கு யாழ். புகையிரத நிலையச் சந்திக்கு பயண ஏற்பாடுகளுடன் வருகை தருமாறு யாழ். சிவில் நிர்வா அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை நாளை புறப்படவிருக்கும் மேற்படி கப்பலில் பயணம்செய்ய விரும்பும் மேலும் ஒரு தொகுதியினருக்கு இன்று காலை 8.30 மணிமுதல் 12.00 மணிவரை யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் ரிக்கெட் விநியோகம் செய்யப்படும் எனவும்— ரிக்கெட் பெற்றவுடன் அவர்களும் இன்றைய தினமே

( 9 ஆம் பக்கம் பார்க்க )

## வங்கியில் திருட்டு முயற்சி

சாவகச்சேரி, மே 20

சாவகச்சேரியிலுள்ளதேசிய சேமிப்பு வங்கிக் கிளையை உடைத்துத் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வங்கி நேற்று வழமைபோல் இயங்கியது. (இ-36-117-6)

## படை நடவடிக்கை வேளை ஷெல் தாக்கு வேண்டாம்

### மன்னார் ஆயர் கோரிக்கை.

வவுனியா, மே 20

மன்னார் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் போது இராணுவம் முன்னேறும் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்றும் —

விமானத் தாக்குதல்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் —

மன்னார் மாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசவ் மன்னார் இராணுவ பிரிக்கேட்டின் கட்டளை அதிகாரியிடம் கோரியுள்ளார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள மாந்தைப் பிரதேசத்துக்குச் சென்று திரும்பியுள்ள மன்னார் ஆயர் அப்பகுதி மக்களின் கோரிக்கைகளாக மேற் கண்ட கோரிக்கைகளை கட்டளை அதிகாரியிடம் ஓர் அறிக்கை மூலம் சமர்ப்பித்துள்ளார்.

[9 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கலாநிதி ஆ. தியாகராசா
மத்திய மகா வித்தியாலயம்
காரைநகர்

## ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் 1999

## அழைப்பு

தலைவர்: **பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை** அவர்கள் (அதிபர்)

பிரதம விருந்தினர்: **திரு. ப. விக்னேஸ்வரன்** அவர்கள் (வலயக் கல்விப்பணிப்பாளர் தீவக வலயம்)

ஸ்தாபகர் நினைவு உரை: **திரு. க. கந்தையா** அவர்கள் (பிரசைகள் குழுத் தலைவர்)

பரிசில் வழங்கல்: **திருமதி தவமணி விக்னேஸ்வரன்** அவர்கள்

இடம்: **நடராசா மண்டபம்**
காலம்: 21-05-99 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(65904) யா/கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்

---

கட்டைவேலி — நெல்லியடி

## ப. நோ. கூ. சங்கம் (வ/ து)

## கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை

| | | |
|---|---|---|
| (1) 50 கிலோ அரிசி சாக்கு | — 2290 | தனி |
| (2) 67 கிலோ நவதானிய சாக்கு | — 33 | ,, |
| (3) ஏனைய கழிவு சாக்கு | — 251 | ,, |
| (4) 50 கிலோ மா உரப்பை | — 5770 | ,, |
| (5) ஏனைய உரப்பை | — 8565 | ,, |

ஆகியன கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு. மீளப் பெறமுடியாத வைப்புப் பணமாக ரூபா 150.00ஐச் செலுத்தி கேள்விப் பத்திரத்தைப்பெற்றுப் பூரணப்படுத்தி 26-05-99 நண்பகல் 12.00 மணிக்கு முன் பொதுமுகாமையாளர் கட்டைவேலி—நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி என முகவரி இட்டு தபால் உறையில் கேள்விப் பத்திரம் எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்

(சி/7599)

---

உ

கோப்பாய் தெற்கு

## தனிப்பனை வீரபத்திரசுவாமி கோயில்

## பூசகர் தேவை

மேற்படி எமது ஆலயத்துக்கு ஒரு நிரந்தர பூசகர் தேவைப்படுகின்றார். தற்போது கும்பாபிஷேகம் செய்யும் நிலையில் இருப்பதனால் 30-05-99 இற்கு முன்னர்

முகாமையாளர்: **திரு. வி. சோமசுந்தரம், இராஜ வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**
என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

குறிப்பு: சகல வசதியும் கொண்ட இருப்பிடம் உண்டு. வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- பரிபாலனசபை

பழைய வீதி, கோப்பாய். (65897)

---

யாழ். மாவட்ட

## வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

19-05-99 இல் (புதன்கிழமை) அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட யா. மா. வ. ச. சம்மேளன சீட்டிழுப்பின் பெறுபேறுகள்:

முதலாம் பரிசு இல. F 06903
இரண்டாம் பரிசு இல. A 02781
மூன்றாம் பரிசு இல. T 05388

ஆறுதல் பரிசுகள் பதினைந்து

| | | |
|---|---|---|
| 1) F 05016 | 6) D 04348 | 11) F 06594 |
| 2) D 05863 | 7) A 03474 | 12) F 06424 |
| 3) J 00316 | 8) J 00917 | 13) T 01332 |
| 4) J 09130 | 9) T 04747 | 14) D 04310 |
| 5) F 09502 | 10) J 06020 | 15) D 00745 |

யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்.

இல. 27, நவீன சந்தை, (மேல்மாடி)
யாழ்ப்பாணம். (சி/7603)

---

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மே 20

கொக்குவில் ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இ. சிவபாதசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும் நல்லூர்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க. சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-6)

## சிப்பாய் காயம்

முகமாலை காவலரண் ஒன்றில் நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் குண்டு ஒன்றுவெடித்துள்ளது.

அந்தக் காவலரணில் கடமையில் இருந்த சிப்பாய் காயமடைந்ததாகக் கூறப்பட்டது.

அந்தச்சிப்பாயிடம் இருந்த கிரனேட்டே தவறுதலாக வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது. (உ-117)

---

## குருபரன்

கல்வி நிறுவனம்
புத்தூர்
**A/L 2001**
'பொது விவேகம்'
திரு. குமாரவேலு
புதிய பிரிவு ஆரம்பம்
21-05-99 வெள்ளி
பி. ப. 4.00 மணி

நிர்வாகி.

(65880)

---

## லிபேட்டி

தியேட்டர்
அச்சுவேலி
பிரகாஷ்ராஜ் - சிவரஞ்சனி
நடிக்கும்
**அவள் ஒரு சிதை**
காட்சிகள்; 10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094-70-212223
(65901)

---

## நாகம்ஸ்

சுன்னாகம்.
பிரபு - குஷ்பு
நடித்த
**சின்னத்தம்பி**
(இனிய பாடல்கள் நிறைந்தது)
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்) (65832)

---

## ராஜா

யாழ்ப்பாணம்.

விஜயகாந்த், விஜய்
கௌதமி, யுவராணி
மற்றும் பலர் நடித்த
**செந்தூரபாண்டி**
10-30, 2-30

## ராஜா 'B'

கார்த்திக் - தேவயானி
**நிலவே முகம் காட்டு**
10-30, 2-30
(சி/7600)

---

## குருநகர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதேவேளை —

மீனவர்களின்பிரச்சினைகள் குறித்த கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். நகரத் தளபதி தலைமையில் 512 ஆவது படைப் பிரிவு அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழிலுக்கான எல்லை விஸ்தரிக்கப்பட வேண்டும்—

வள்ளங்களில் பாய்கள் பாவித்து மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்—

மீனவர்கள் படையினரால் தாக்குவது நிறுத்தப்படுவதும் மீனவர்களின் அடையாள அட்டைகள் பறிக்கப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும் — ஆகிய கோரிக்கைகளை கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகள் நகரத் தளபதியிடம் முன்வைத்தனர்.

இதற்குப் பதிலளித்தநகரத் தளபதி மீனவர்களின் மீன்பிடிக்கும் எல்லை குறைக்கப்படாது என்றும் வழமை போன்று மீனவர்கள் ஏற்கனவே தொழில்செய்து வந்த எல்லைக்குள் மீன்பிடிக்கலாம் என்றும்—

வள்ளங்களில் பாய் பாவிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார் என்று கலந்துரையாடலில் கலந்து கொண்டோர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

[இ-5-6-7-51-139-173-ரி]

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. க. சூரியகுமாரன்
அவர்களின் அன்பு மாமனார்

## சின்னத்தம்பி முத்துவேலு

(முன்னாள் பொது முகாமையாளர், புங்.—நயி. ப. நோ. கூ. சங்கம்)

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்.

(65906)

---

## மரண அறிவித்தல்கள்

## திருமதி சண்முகலிங்கம் மகாலட்சுமி

சுழிபுரம் மேற்கு பொ. சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவி திருமதி மகாலட்சுமி அவர்கள் 19-5-99 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு-தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம்-செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கே. கே. விஜேந்திரா, கே. சிற்றம்பலம், கே. மார்க்கண்டு, எஸ். சரஸ்வதி மற்றும் கே. ஜி. விஜேந்திரா (அவுஸ்திரேலியா), கே. அரிச்சந்திரா, கே. உருத்திரா, திருமதி கே. இந்திரா, கே. இரவீந்திரநாத் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருமதி அ. கனகபூசணத்தின் அன்பு மைத்துனியும் தனலட்சுமி, சண்முகநாதன் (லண்டன்), சண்முகவதனி (சுவிஸ்), சண்முகநளினி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் ராதா (லண்டன்), வைத்திலிங்கம் (சுவிஸ்), மனோகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் வேல்பிரியன் (லண்டன்), மிருகாசினி (சுவிஸ்), மிருபாகினி (சுவிஸ்), சாளினி (லண்டன்), வாகினி (லண்டன்), சாமினி (லண்டன்), சாருணி (லண்டன்), ஜெனனி (லண்டன்), ஜெனகன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. சண்முகலிங்கம் (கணவன்)

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். [65893]

---

## சின்னக்குட்டி பரராஜசேகரம்

(உரிமையாளர், சேகர் சவுண்ட் அன் மியூசிக்)

நல்லூர் கடுக்காயடி லேனைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னக்குட்டி பரராஜசேகரம் 19-05-99 அன்று காலமானார்.

இவர் பவளரத்தினத்தின் அன்புக் கணவரும் அரசமணியின் அன்புச் சகோதரரும் பார்த்தீபன், குமணதீபன், அபிராமி (மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தரகல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகநாதன், அப்புத்துரை ஆகியோரின் மைத்துனரும் மகேந்திரன் (லண்டன்), நேமிநாதன் (லண்டன்), ஜெயபாபு (லண்டன்), சுகுணதாஸ் (லண்டன்), சுகிர்தாசன் (லண்டன்), திருமகள், டுலானி ஆகியோரின் மாமனாரும் றோமியா, தார்மீகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20-05-99) வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து செம்மணி இந்துமயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
P. பார்த்தீபன், P. குமணன் (பிள்ளைகள்)

சேகர் சவுண்ட் அன் மியூசிக்,
6, கடுக்காயடிலேன்,
நல்லூர். (65885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது யோசனை ஏற்கப்பட்டால் காங்கிரஸ் பெரு வெற்றி பெறும்

## தாரிக் அன்வர் நம்பிக்கை

புதுடில்லி, மே 20

இந்தியர் அல்லாத எவரும் இந்நாட்டின் பிரதமராகக் கூடாது என்ற தமது யோசனை ஏற்கப்பட்டால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெறும் என மூத்த காங்கிரஸ் பிரமுகர் தாரிக் அன்வர் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியின் போதே அன்வர் இவ்வாறு தெரிவித்தார்.

திருமதி சோனியாகாந்தி வெளிநாட்டவர் என்ற விடயத்தை முன்வைத்து பாரதீய ஜனதாக் கட்சியும் ஏனைய கட்சிகளும் பிரசாரம் செய்யும். இதனால் காங்கிரஸ்கட்சி பல்வேறு சங்கடங்களை சந்திக்க நேரிடும் என்பதால் இந்த விடயங்கள் தொடர்பாக அனைத்து அம்சங்களையும் பரிசீலித்து பாரதீய ஜனதாக்கட்சி அரசியல் ஆதாயம் அடைந்துவிடக்கூடாது என்பதற்காகவே இந்தியாவின் ஜனாதிபதி, உபஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளில் இந்தியாவில் பிறந்த இந்தியர் ஒருவரே இருக்க வழி வகுக்கும் வகையில் அரசமைப்பில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற பிரச்சினையை நானும் சரத் பவாரும், பி.ஏ. சங்மாவும் எழுப்பினோம். இதற்காக எம்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாது என நம்புகிறோம்.

எனினும் எந்த ஒரு தியா

### உலக அரங்கில்

கத்துக்கும் நாங்கள் தயாராக உள்ளோம்.

சரத்பவார் பிரதமர் பதவிக்கு வரத் தகுதியும் திறமையும் உடைய தலைவர் தான். ஆயினும் பவாருக்கு அத்தகைய ஆசை எதுவும் இல்லை எனவும் அன்வர் தமது செவ்வியில் மேலும் தெரிவித்திருந்தார். (ஐ-க)

# பறக்கும் பாம்பு குஜராத்தில் மீட்பு

புதுடில்லி, மே 20

மிகவும் அரிய வகையின தான பறக்கும் பாம்பு ஒன்றை இந்திய வனவியல் நிபுணர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் ராஜ்கோட் அருகே கிராமம் ஒன்றில் 40 அடி உயரமான மலைச்சாரலில் இருந்து இந்தப் பாம்பு கண்டுபிடிக்கப் பட்டது. சென்னை கால்நடை நல வாரியத்தில் பணியாற்றும் சுற்றுச் சூழல் நிபுணரான சொசாந்த் பூஷ் என்பவரே இந்தப் பாம்பைக் கண்டு பிடித்துள்ளார்.

விரிவான ஆய்வு செய்த பின்னர் அந்தப் பாம்பு வனத்தில் விடப்பட்டது. (ஐ)

# இராணுவ சடலங்கள் ஐ. நா. விடம் கையளிப்பு

லண்டன். மே 20

1950 — 53 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இடம்பெற்ற கொரிய யுத்தத்தின் போது காணாமற் போன 6 அமெரிக்கர்களின் சடலங்களை வட கொரியா ஐ நா. விடம் கடந்த வெள்ளிக்கிழமை ஒப்படைத்துள்ளது.

அமெரிக்க இராணுவத்துக்கும் சீனப்படைக்குமிடையே இடம்பெற்ற வட கொரிய யுத்தத்தின் போது காணாமற் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இதன்ஒரு கட்டமாகவே ஆறு அமெரிக்க இராணுவத்தினரின் சடலங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

கொரிய யுத்தத்தின் போது 8 ஆயிரத்து 200 க்கும் மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் காணாமற்போனமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-க)

# பெனாஸிரின் கணவர் தற்கொலை முயற்சி?

## பொலீஸார் கூறுகின்றனர்

இஸ்லாமாபாத், மே 20

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனஸிர் பூட்டோவின் கணவரான அஸிப் அலி சர்தார் சிறையில் தற்கொலை செய்துகொள்ள முயறதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இக் கூற்றை அவரது ஆதரவாளர்கள் மறுத்துள்ளனர். சிறையில் அவர் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். ஒரு கொலை வழக்குக்குறித்து அவரை விசாரித்துக் கொண்டிருந்தபோது அவர் உடைந்த கண்ணாடித் துண்டினால் தனது கழுத்தை அறுத்துக் கொள்ள முயன்றதாக கராச்சியில் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

# டெண்டுல்கரின் தந்தை மரணம்; அவசரமாக நாடு திரும்புகிறார்!

## இந்திய கிரிக்கெட் அணிக்குப் பாதிப்பு

மும்பாய், மே 20

பிரபல மராட்டிய இலக்கியவாதியும் இந்தியாவின் பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரின் தந்தையுமான ரமேஷ் டெண்டுல்கர் நேற்று முன்தினம் இரவு மும்பையில் காலமானார்.

தற்சமயம் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள சச்சின் டெண்டுல்கர் தந்தையின் மறைவை அடுத்து நேற்றிரவு அவசரமாக மும்பை திரும்பி இருந்தார்.

இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமான அவர் ஆட்டத்தில் இடைநடுவில் விலகுவது இந்திய அணியினரின் மனோதிடத்தைப் பாதிக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

மும்பை கீர்த்திக் கல்லூரியின் பேராசிரியரான ரமேஷ் டெண்டுல்கர் சிலகாலம் இருதயநோயினால் பாதிக்கப் பட்டிருந்தார். (ஐ)


## அறிவித்தல்

### புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்

(வ-து)

### 28 - 02 - 97 கணக்காய்வு

எமது சங்கத்தின் மேற்படி காலத்திற்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் சங்கத்தின் முன்னைய பணியாளர்கள், அங்கத்தவர்கள் சங்கத்துடன் கொடுக்கல வாங்கல்களில் தொடர்புடைய ஏனையவர்களும் (கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) தகுந்த ஆதாரங்களுடன் கணக்கு விவரங்களைச் சமர்ப்பித்து சீர் செய்து உறுதிப்படுத்திக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். இன்றிலிருந்து பதினான்கு நாள்களுக்குள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் சங்கப் புத்தகங்களின் படி சரி என்று ஏற்றுக்கொண்டு கணக்காய்வு முடிவுறுத்தப்படும்.

தொடர்பு கொள்ளுமிடம்:

புங் - நயி ப. நோ. கூ. சங்கம்
புங்குடுதீவு 1

தலைவர்,
புங்-நயி ப.நோ.கூ. சங்கம்

(சி/7590)



## 31-ம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 – 06 – 1921 | 20 – 04 – 1999 |

அமரர்

### சின்னத்துரை குமாரசாமி

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய் வாழ்ந்து எங்களை
எல்லாம் வழிகாட்டி. எம் நெஞ்சங்களில்
நிறைந்து வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

இல: 73, கச்சேரி, நல்லூர் வீதி,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

(65881)



உ

வடகோவை

## அருள்மிகு ஸ்ரீசித்திர வேலாயுதசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம்

| | | | | |
|---|---|---|---|---|
| 20 - 05 - 1999 | வியாழன் | கொடியேற்றம் | பகல் | 11.00 மணி |
| 27 - 05 - 1999 | வியாழன் | சப்பறம் | மாலை | 5.00 மணி |
| 28 - 05 - 1999 | வெள்ளி | தேர் | காலை | 9-00 மணி |
| 29 - 05 - 1999 | சனி | தீர்த்தம் | காலை | 10 00 மணி |
| | | கொடியிறக்கம் | மாலை | 4.00 மணி |
| 30 - 05 - 1999 | ஞாயிறு | திருக்கல்யாணம் | மாலை | 5.00 மணி |

### நன்றி நவிலல்

16 - 05 - 1999 ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த கோவையூர் சித்தாந்தபானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்களின் பாராட்டு விழாவில் கலந்து சிறப்பித்து ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

- ஆலய பரிபாலன சபையினர்

கோப்பாய். (65891)



# பெரதேனியா

## பல், மூக்குக் கண்ணாடி அகம்

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க

| வடமராட்சியிலும் | சுன்னாகத்திலும் |
|---|---|
| (1ஆம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை) | (K. K. S. றோட், இலங்கை வங்கி அருகில்) |

தினமும் தனது முழுநேர சேவையை ஆரம்பித்துள்ளது

- ❈ பல்கட்டுதலிலும் (PROSTHETICS) மிதப்புப் பற்களிற்கு கிளிப்போடுதலிலும் (ORTHODONTICS) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிறப்புத் தேர்ச்சி பெற்று வடமாகாணத்தில் இயங்கும் தனித்துவம் பெற்ற ஒரே இடம் என்பது குறிப்பிடத்தக்கது.
- ❈ பல வருடகால அனுபவமிக்கவர்களால் கண் பரிசோதிக்கப்பட்டு சரிவர தாமதமின்றி விநியோகித்து முன்னணியில் திகழ்கின்றது.

| HEAD OFFICE | RESIDENCE |
|---|---|
| PERADENIYA DENTAL & OPTICALS | 'PERADENIYA' DENTALS |
| 494, HOSPITAL ROAD, JAFFNA. | MAVADY ROAD, MOOLAI. |
| | T. Phone 021 – 3036 |

(65895)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வெள்ளை நிற இத்தாலிய லம்பிரட்டா 6 ஸ்ரீ ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எ. என். மதன் 18/4-1 சீனியர் ஒழுங்கை. (கலட்டி கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (65826)

### காணவில்லை

ஜெசி இன மாவெள்ளை நிற கன்றுத் தாச்சி மாடு அத்துடன் சிறிய சிவப்பு நெற்றியில் வெள்ளை நிறக் கன்றும் காணவில்லை. தற்செயலாக உங்கள் காணிகளில் வந்திருந்தால் இதை யாராவது கண்டிருந்தால் திரு. தங்கவேல், 539, கஸ்தூரியார் வீதியில், [இந்து ஆரம்பப் பாடசாலை அருகில்] அறியத் தரவும். [65866]

### தவறிவிட்டது

பாக்கியராஜா பகவதியம்மா ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் திருநெல்வேலியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இராச வீதி, கல்வியங்காடு என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். [65861]

இராசபாதை வீதியைச் சேர்ந்த நந்தகுமார் கலாதேவி ஆகிய எனது தேசிய அ. அட்டை, விசேட அடையாள அட்டை மற்றும் எனது மகன் நந்தகுமார் தர்சனின் பாடசாலை அடையாள அட்டை என்பன 16 – 05 – 99 யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆ. பரமானந்தம் 150, திருநெல்வேலி கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [65864]

### ஆங்கிலம் விசேடமாக

O/L Credit, Distinction பெறுபேறடையவும் G.A.Q. பட்டதாரி ஆங்கிலமும் (Spoken English) கற்பிக்கப்படும். B se London Inter ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [65800]

---

## பழைய மாணவர் சங்கம்
## யாழ். விக்கினேஸ்வராக் கல்லூரி
கரவெட்டி
## வருடாந்தப் பொதுக் கூட்டம்

கரவை விக்கினேஸ்வரா பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 1999—05—30 (ஞாயிறு) மு. ப. 9 30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். எனவே பின்வரும் விடயங்களை பழைய மாணவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

1. பிரேரணைகள் இருப்பின் 27—05 99 க்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.
2. புதிதாக அங்கத்தவர்களாக சேர்பவர்கள் அன்றி அங்கத்துவத்தைப் புதுப்பிப்பவர்கள் 30-05-1999 க்கு முன்னர் பொருளாளருடன் தொடர்பு கொள்ளவும்.
3. ஆயுள் கால அங்கத்தவராக பழைய மாணவர்கள் இணைவதன் மூலம் உங்கள் கல்லூரியைப் பெருமைப்படுத்துவதை நன்றியுடன் வரவேற்கின்றோம்.
4. அனைவரினதும் வருகை தவறாது வேண்டப்படுகின்றது.


நன்றி

க. தணிகாசலம்
தலைவர்

கி. ரவிக்குமார்
செயலாளர்
(சி-7597)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 — 05 — 1951

உதிர்வு: 31 — 05 — 1998

அமரர்
## காளிமுத்து தங்கவேல்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

திருமதி த. சறோஜா.
45, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

[65871]

---

## மங்களகரமான திறப்பு விழா

மீண்டும் சுன்னாகத்தில்
## வசந்திஜா எலக்ரிக்கல்ஸ்
## VASANTIJA ELECTRICALS

100, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.
(பழைய பொலீஸ் நிலையம் முன்பாக)

இன்று (20 – 05 – 99) வியாழக்கிழமை காலை 9 00 மணி


ஆதரவாளர்களையும், வாடிக்கையாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- உரிமையாளர்

(65878)

---

உ
தில்லையம்பதியாள் துணை
பண்பான தெய்வீக மாட்சி நிறைத் தலமான
கோண்டாவில் தில்லையம்பதி
## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள்
திருக்கோயிலின் கொடியேற்றத் திருவிழா
இன்று 20 05 1999 வியாழன் முற்பகல் 10 மணிக்கு



## வீடியோப் படப்பிடிப்பாளர்
## முத்தொளி

கோண்டாவில், தில்லையம்பதி

கிளை: குளப்பிட்டிச்சந்தி, கொக்குவில்.

(65884)

---

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.
## உதவி வெற்றிடம் - பதிவாளர்

மேற்படி பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிர்வாக அனுபவம், D.A.M. சான்றிதழ், வைத்திய அனுபவம் கொண்டோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 06 – 06 – 1999

தொடர்பு முகவரி:
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அதிபர்
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி

[65892]

---

## கௌரவிப்பு

இணுவில் பிரதான வீதியில் அமைந்துள்ள
## சிவன் தேவஸ்தானத்தில்

கடந்த 15-05-99 சனிக்கிழமை சிவன் அலங்கார உற்சவபூர்த்தி விழாவில் கோண்டாவில் ஆசிமட – அரசடி விநாயகர் ஆலய பிரதமகுருவும் எங்கள் ஆலய பிரதம குருவுமாகிய

பிரம்மஸ்ரீ
## தாணு வாசுதேவக்குருக்கள்

அவர்களுக்கு

க. தவராஜா தலைமை வகித்து வாழ்த்துரைக்க தர்மகர்த்தா மாலை அணிவிக்க,

கு. முருகையா அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து இணுவில் சிவன் அடியார்கள் மனமகிழ்ந்து குருஅருள் ஆசிவேண்டி மகிழ்ந்தார்கள்.

சுபம்.

சி. பரமேஸ்வரன்

ஸ்ரீ விஸ்வேஸ்வர சுவாமி
தேவஸ்தானம்.

(65854)

---

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.

University of Jaffna will entertain applications from suitable qualified persons

upto 30 th June 1999

for the undermentioned posts.

1. Senior Lecturer Grade I / Senior Lecturer GradeII / Lecturer [Probationary] in Botany / Chemistry / Computer Science / Mathematics & Statistics / Physics / Zoology.
2. Professor In Statistics / Physical Chemistry / Botany.
3. Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer [Probationary] In Siddha Medicine.

| SALARY CODE | POSTS | SALARY SCALE |
|---|---|---|
| B—01 | Professor | Rs. 22,950— 6x425-25,500/- p.m |
| B—02 | Associate Professor | Rs. 21,250— 6x340-23,290/- p.m |
| B—03 (a) | Senior Lecturer Grade [illegible] | [illegible]0-21,845/- p m |
| B—03 | Senio[illegible] Grade [illegible] | [illegible]s. 15,725— 5x340-17,425/- p.m |
| B—04 | Lectu[illegible] (Probationary) | Rs. 9,350—10x275-12,100/- p.m |

In additio[illegible] the above salary, a[illegible]cademic allowance of 30% of the salary approve[illegible] the University Grants Commis[illegible] will also be paid.

Applicatio[illegible] and other detai[illegible]y be obtained from the office of the Acting Senior Assistant Registrar Establishments (Academic) University of Jaffna Sri Lanka, either in person or by sending a Money Order for Rs. 20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna' together with a self - addressed stamped envelope 23x10 cm in size.

Applications from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

REGISTRAR.
University of Jaffna,
Sri Lanka

(C/7592)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக் கழகத்துடன் இணைக்கக் கோரி

# ஆயுர்வேத மாணவர்கள் கையெழுத்து இயக்கம்

யாழ்ப்பாணம், மே 20

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள லங்கா ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியை யாழ். பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாக இணைப்பதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனக்கோரி கையெழுந்து இயக்கம் ஒன்றை மேற்படி கல்லூரி மாணவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகள், ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று வெளியேறிய பழைய மாணவர்கள், சமயப்பெரியோர்கள் ஆகியோரிடம் கையொப்பம் பெறும் வேலைகள் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும், மற்றும் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியை யாழ். பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமாக இணைக்க வேண்டும் என்ற கோரிகைகளை முன் வைத்து மேற்படி ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மாணவர்கள் கடந்த ஒரு வாரகாலமாகத் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்தது தெரிந்ததே.

இதற்கிடையில்—

வட இலங்கை சுதேச வைத்திய சபையினருக்கும் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்தே பொது மக்களிடம் கையெழுத்துச் சேகரிக்கும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக மாணவர் பிரதிநிதிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ—7)

## ஆலயத்துக்கு வசந்த மண்டபம்

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்துக்குப் புதிதாக வசந்த மண்டபம், சுற்றுமதில் ஆகியன அமைக்கப்படுகின்றன.

அத்துடன் கட்டி அரை குறையில் இருந்த விநாயகர், வைரவர், முருகன் கோவில்களின் வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(ஐ-27)

### பரீட்சார்த்த முயற்சியாக

## 8 மெ. தொன் வெங்காயம் தெற்கே அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணம், மே 20

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் (ச. தொ. ச) மூலம் பரீட்சார்த்தமாக 8 மெற்றிக் தொன் சின்ன வெங்காயம் யாழ்ப்பாணத்தில் கொள்வனவு செய்யப்பட்டுக் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ஏனைய உற்பத்திப் பொருள்களும் ச. தொ. ச மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதனால் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு கொழும்பில் சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதுடன் விவசாயிகளுக்கு திருப்தியான வருமானத்தையும் பெற்றுக் கொடுக்கமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது (ஐ-5)

## 5,000 கோழிக் குஞ்சுகள் அடுத்த வாரம் விநியோகம்

கால்நடை சுகாதாரத் திணைக்களத்தினால் அடுத்த வாரம் 5 ஆயிரம் பேட்டுக் கோழிக் குஞ்சுகள் கால்நடை கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளன.

இத்திணைக்களத்தினால் ஏற்கனவே 5 ஆயிரம் புறோயிலர் கோழிக்குஞ்சுகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

## 2 ஆயிரம் விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், மே 20

உணவு விவசாய நிறுவனத்தினால் இரண்டாயிரம் விவசாயப் பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த விவசாயப் பயனாளிகளுக்கு மண்வெட்டி, கத்தி, வாளி, அரிவாள், பட்டை, புல்லுச்சத்தகம் போன்ற பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

சண்டிலிப்பாய், சங்கானை நல்லூர், கரவெட்டி, தெல்லிப்பழை, உடுவில், பளை, ஊர்காவற்றுறை, வேலணை, கோப்பாய், பருத்தித்துறை, தென்மராட்சி, மருதங்கேணி, ஆகியபிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து இரண்டாயிரம் விவசாயப் பயனாளிகள் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு விரைவில் குறிப்பிடப்பட்ட விவசாய உபகரணங்கள் உணவு விவசாய நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் 44 குளங்களும், 11 விவசாய வீதிகளும் கமநல சேவை நிலையத்தினால் திருத்தம் செய்யப்படவுள்ளன.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட விவசாய வீதிகளும் குளங்களுமே திருத்தம் செய்யப்படவுள்ளன.

(ஐ-5)

## கைதடியில் வடிசாலை அடுத்த வாரம் திறப்பு

கைதடியில் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சாராய வடிசாலை எதிர்வரும் 29 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது,

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ. பூபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சாராய வடிசாலைக் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் பனை தென்னை வள கூட்டுறவு ஆணையாளர் சு. பரநிருபசிங்கம், மதுவரித் திணைக்கள ஆணையாளர் எஸ். துரைராஜா, பனை தென்னை வள ஆலோசகர் எஸ். பாலகுமார் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-5)

### வேலணைப் பகுதியில்

## ஆள்களற்ற வீடுகளில் பொருள்கள் சூறை

வேலணை, மே 20

வேலணைப் பகுதியில் பட்டப்பகலிலும் திருட்டுகள் அதிகரித்துள்ளன.

குடியிருப்பாளர்கள் அற்ற வீட்டின் கூரைஓடுகள், கதவு, யன்னல்கள் போன்ற பெறுமதியான பொருள்களே களவாடப்படுகின்றன.

இவ்வாறு களவாடப்படும் பொருள்களின் பெரும்பகுதி இங்கு நடைபெறும் அபிவிருத்திப் பணிகளுக்குப் பொறுப்பான ஒப்பந்தகாரர்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

புதிய கட்டடங்கள் அமைக்கப்படும் அதேவேளை பழைய வீடுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டு விற்பனை செய்யப்படுவது குறித்து மக்கள் பெரிதும் விசனமடைகின்றனர்.

(ஐ-167)

## சாவகச்சேரி நகரில் தொலைபேசி விஸ்தரிப்பு

சாவகச்சேரி, மே 20

சாவகச்சேரி நகரில் தொலைத்தொடர்பு அலுவலகம் தனியார் கட்டடமொன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நகரில் கேபிள் இணைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நகரில் தொலைத்தொடர்பு கேபிள் இணைப்பிற்காக தூண்கள் நடப்பட உள்ளன.

[ஐ-31]

## வலிகாமம் வலயத்துக்கு ஆளணியினர் நியமனம்

வலிகாமம் தெற்கு, மே 20

வலிகாமம் கல்வி வலயத்தின் ஆளணியினராக ஆறு எழுதுவினைஞர்கள், இரண்டு தமிழ் சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர்கள் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளர், சிறாப்பர், கணக்குப் பதிவாளர் ஆகியோர் இம்மாதம் 3 ஆம் திகதியில் இருந்து நியமிக்கப்பட்டு, கடமையேற்றுள்ளனர்.

எழுதுவினைஞர்களாக செல்விகள் எஸ். வனஜா, ரி. சுதர்சினி, என். சத்தியபாமா, ஏ. ஜெயந்திமாலா, ஆர். சபிதா, ரி கார்த்திகா ஆகியோரும், தமிழ் சுருக்கெழுத்துதட்டெழுத்தாளர்களாக செல்விகள் ரி. முருகாம்பிகை, ஜே வாசுகி ஆகியோரும் கணக்குப் பதிவாளராக செல்வி எல். சிறீரஜனி, களஞ்சியப் பொறுபபாளராக வி. தனேஸ்குமார், சிறாப்பராக செல்வி பி கமலவேணி ஆகியோரும் நியமனம் பெற்றுள்ளனர்.

(ஐ-152)

## திருடிய மோ. சைக்கிளை விற்க முயன்றோர்சிக்கினர்

அரியாலை, மே 20

யாழ் கச்சேரி கிழக்கு லேனில் உள்ள வீடு ஒன்றில் திருடிய சாளி மோட்டார் சைக்கிளை யாழ். சின்னக்கடைப் பகுதியில் வைத்து விற்க முயற்சித்த திருடர்கள் பொது மக்களிடம் சிக்கியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

திருடிய சாளி மோட்டார் சைக்கிளை மிகவும் தந்திரமாகச் சின்னக்கடைப் பகுதிக்குக் கொண்டு வந்து அங்கு வைத்து அதற்கு விலை பேசிக்கொண்டிருந்த சமயமே பொது மக்களிடம் வசமாக மாட்டிக்கொண்டனர்.

பொதுமக்களிடம் சிக்கிய திருட்டுக் கோஷ்டியினர் பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

சுமார் ஐந்து பேர் கொண்ட இக் கோஷ்டியினர் பின்னர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-17)

### நியமனம் வழங்கக் கோரி

## ஒரு தொகுதி பட்டதாரிகள் விபரம் மாகாண சபைக்கு

யாழ்ப்பாணம், மே 20

யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் 1996-97 ஆண்டுகளில் பட்டம் பெற்று வெளியேறி இதுவரை வேலை வாய்ப்பு எதுவும் வழங்கப்படாத நிலையில் உள்ளவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கக்கோரி ஒரு தொகுதி பட்டதாரிகளின் பெயர் விவரங்கள் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மேற்படி பெயர் விவரப் பட்டியல்களை அனுப்பி வைத்துள்ளது.

இதே வேளை —

எண்ணாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்று ஏற்கனவே தாம் வகித்த பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் பதவியை ராஜினாமாச் செய்த பட்டதாரிகளின் இடத்துக்கு மேற்படி பட்டதாரிகளை நியமிப்பது குறித்து மாகாணக் கல்வி அமைச்சு ஆலோசித்து வருவதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

(ஐ-7)

## மோ. சைக்கிளால் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், மே 20

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து விழுந்து இளம் குடும்பப் பெண் ஒருவர் காயமடைந்தார்.

சங்குவேலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில அன்ரன்யூட் சிவரூபி (வயது 22) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## தமிழ் மொழித் தினப்போட்டி

வடமராட்சி, மே 20

வடமராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்படும் தமிழ் மொழித் தினப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்கள் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-173-118)

## வீதி திருத்தம்

உரும்பிராய், மே 20

மருதனார்மடம் — உரும்பிராய் பிரதான வீதி செப்பனிடப்படுகிறது முழுமையாகத் தார் பூசும் வேலைகள் இடம்பெறுகின்றன.

வீதிஅபிவிருத்தி அதிகார சபையினால் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

(ஐ-154)

## பெண்களுக்குத் தொழிற்பயிற்சி

யாழ்ப்பாணம், மே 20

குடும்பத தலைவர்களை இழந்த 50 பெண்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தினால் தொழிற் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதற்கான தெரிவு விரைவில் இடம் பெறவுள்ளது.

இதேவேளை-

போஷாக்கு குறைந்த பிள்ளைகளை இனம் கண்டு அவர்களுக்கு பிஸ்கெற் தயாரித்து வழங்குவதற்கும் 'யுனிசெவ்' தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)



## ஆங்கில ஆசிரியர் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, மே 20

ஆரம்பபிரிவு ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கொன்று எதிர்வரும் புதன்கிழமை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

தரம் மூன்று முதல் தரம் ஆறு வரையான வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியரை ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் இக்கருத்தரங்கில் பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளது.

(ஐ-152)

## பஸ் - சைக்கிள் விபத்து

யாழ்ப்பாணம், மே 20

இலங்கைப்போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றுக்கும், சைக்கிள் ஒன்றுக்கும் இடையே இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் வந்த இருவர் தலையில் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில யாழ். வேம்படிச்சந்தியில் நடைபெற்றது.

தலையில் படுகாயமடைந்த யுவதி ஒருவரும், சிறுவன் ஒருவனும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் பழனி கதிரவேலு

(சடையாளி, காரைநகர்)

இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


மனைவி, மகன்.

சோதிவேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.

(65872)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 10 – 03 – 1914



உதிர்வு 20 – 04 – 1999

அமரர்

### சின்னத்தம்பி தம்பிராசா

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருமகன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
10/2, அடப்பன் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்:
க. ஜெயராஜா. (மருமகன்)
3 ஆம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை.

(65874)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### வல்லிபுரம் ஜெகதீசன்

(பொறியியலாளர், உடுவில் கிழக்கு, சுன்னாகம்.)

மலர்வு: 17–10–1946 உதிர்வு: 20–05–1987

திதி: 07–06–19,9

12 ஆண்டுகள் கடந்திட்ட போதும் ஆறவில்லை எம் துயர். உன் நாமம் எம் நெஞ்சில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

தாயார், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார், உறவினர்.

''காமாட்சி இல்லம்''
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(65873)

## 30,000 போத்தல்கள்

சண்டிலிப்பாய், மே 20

பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தி வரும், போத்தலில் பனங்கள் அடைக்கும் தொழிற்சாலையில் இந்த வருடம் 30 ஆயிரம் போத்தல்களில் கள் அடைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சங்க அங்கத்தவர்களால் கொண்டுவரப்படும் பனங்கள்ளை முற்றாக விற்க முடியாதிருப்பதாகவும் —

போத்தலில் அடைத்து வைப்பதன் மூலம் கள் சீசன் குறைந்த காலத்தில் விற்பனைக்கு விட முடியும் என்றும்—

இதனால் கள்ளிறக்கும் தொழிலாளர்களான சங்க அங்கத்தவர்கள் நன்மையடைவார்கள் என்றும்— மேற்படி சங்கத்தின் பொது முகாமையாளர் கே. குணரத்தினம் தெரிவித்தார்.

(இ-135)

## உயிரிழப்பு

வவுனியா, மே 20

மன்னார் முருங்கன் பகுதியில் வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது நேற்று முன்தினம்காலை விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார் என்றும் — மற்றும் இரு பொலீஸார் காயமடைந்தனர் என்றும் — படைத் தரப்புத் தெரிவித்தது.

(உ-164-21-3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இரத்தினம் மனோகரன்

மண்மகிழ: 07-07-1944 கண்நெகிழ: 31-05-1998

திதி: 20-05-1999

சோடிழந்த அன்றிலைப்போல் துயரமானோம்
நாம் தேரை மயில் வாயில் அகப்பட்டதோர் சர்ப்பமானோம்.
காடுதனில் இனம் பிரிந்த கலைகள் ஆனோம்.
கருங்கடலில் காற்றடிக்கும் கப்பல் ஆனோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(65879)

## 'முயற்சி'

### அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திறன் விருத்தி மையம்

### யாழ். மாவட்ட இளைஞர்களுக்கான சுயதொழில் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

எமது நிறுவனத்தினால் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பயிற்சி நெறி | பயிற்சிக் காலம் | கல்வித்தகைமை |
|---|---|---|---|
| 1. | தையல் இயந்திரம் திருத்தல (பெண்கள் மட்டும்) | 6 மாதம் (சனி, ஞாயிறு) | க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். |
| 2. | தட்டச்சு இயந்திரம் திருத்தல் | 6 மாதம் (சனி, ஞாயிறு) | ,, ,, ,, |
| 3. | நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தல் | 4 மாதம் | க.பொ.த. சாதாரண சித்தி |
| 4. | வயறிங்—றிவைண்டிங் | 6 மாதம் | ,, ,, ,, |
| 5. | உடையமைத்தல் | 6 மாதம் | க.பொ.த. சாதாரணம்வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். |
| 6. | புத்தகம் கட்டுதல் | 3 மாதம் | ,, ,, ,, |
| 7. | தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து | 6 மாதம் | தமிழ் திறமைச் சித்தியுடன் க.பொ.த. சாதாரண சித்தி |
| 8. | தமிழ் தட்டச்சு | 6 மாதம் (சனி, ஞாயிறு) | ,, ,, ,, |
| 9. | ஆங்கில தட்டச்சு | 6 மாதம் (சனி, ஞாயிறு) | ஆங்கில திறமைச் சித்தியுடன் க.பொ.த. சாதாரணம் சித்தி |
| 10. | ரி.வி, றேடியோ திருத்தல் | 6 மாதம் | ,, ,, ,, |

விண்ணப்ப முடிவு திகதி: 28 - 05 - 99

ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.
விண்ணப்பங்கள் யாவும் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

''செயலாளர்''

### அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

106, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

பயிற்சி நெறிகளுக்கு பயிற்சிக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

அ. நல்லதம்பி
உப தலைவர்

[சி/ 7594]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உகந்த சாதனம்

போரை நிறுத்தி அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் சமாதானப்பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் —

இதனைப் பிரதான கோரிக்கையாக முன்வைத்த, காணாமற் போன படையினரின் பாதுகாவலர் சங்கம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு நகரில் பேரணி ஒன்றை நடத்தியிருக்கின்றது.

இதே போன்று, படைகளை வாபஸ் செய்து, போரை நிறுத்துமாறு வன்னியில் (மல்லாவியில்) அங்குள்ள மக்கள் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தத் தொடர் உண்ணாவிரதம் ஆரம்பமாகியது.

கொழும்பில் பேரணி நடத்தியவர்களும் வன்னியில் தொடர் உண்ணாவிரதம் இருப்பவர்களும் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களே. தலையிடியும் காய்ச்சலும் அவர் அவருக்கு வந்தால்தான் தெரியும். துயரத்தையும் வேதனையையும் இழப்புக்களின் பாதிப்புகளையும் அனுபவித்தாலே உணரமுடியும்.

அரசியல் தலைமைத்துவத்திலும், ஆட்சித் தலைமைத்துவத்திலும் உள்ளவர்களுக்கு இந்த அனுபவம் இல்லை. அதனாலேயே போரின் தாக்கங்களை அவர்களால் சரியாகவும் முழுமையாகவும் உணர்ந்து கொள்ள முடிவதில்லை.

அதனால் அரசியல் அட்டவணைகளை முன்நிறுத்தி அரசாங்கத் தலைவர்கள் போரைத் தொடர்கிறார்கள். மக்கள் விருப்பத்தைப் புறக்கணித்து அரசியல்இலக்குகளை, இலாபங்களை நாடுவது மட்டுமன்றி, போரை நியாயப்படுத்தவும் செய்கிறார்கள்.

போரில் இரு பகுதியினரும் அழிகிறார்கள்; நாட்டின் பொருளாதாரம் சீரழிகிறது என்று மேடைகளில் பேசிக் கொண்டே அதனைத் தொடர்கிறார்கள்.

மகாநாயக்கதேரர் ஒருவரின் தேச நலன் நாடிய ஆலோசனையைக் கூட ஏறெடுத்தும் பார்க்காமல் போரைத் தொடரவும், பேச்சுவார்த்தைக்கான கதவுகளை மூடிவிடவும் அரசு வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறது!

இதனைப் போரினால் பாதிப்புற்ற சிங்கள மக்கள் மட்டுமன்றி ஏனைய தரப்புகளும் உணர்கின்றன. எது முந்தியோ, பொதுத் தேர்தலை அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்தும்வரை அரசாங்கம் போரை நிறுத்தப் போவதில்லை என்பதே இன்றைய நிலை.

தீர்வுப் பொதி, போரை முடிவுக்குக் கொண்டு வருதல் என்பன வெற்றுக் கோஷங்கள். இதனை அறிந்தே தென்னிலங்கை மக்களும் பேரணிகள் நடத்தத் தொடங்கி உள்ளனர்.

தென்மாகாண சபைத் தேர்தலில் வாக்குகள் மூலம் தமது நிலைப்பாட்டை அவர்கள் தெரிவிப்பார்களானால் அரசாங்கம் தனது நிலையை மாற்ற நிர்ப்பந்திக்கப்படும். அதுவே எல்லாவற்றையும் விட, அரசியல்வாதிகளை வழிக்குக் கொண்டு வருவதற்கு உகந்த சாதனம்.

## புலோலி கூ. சங்க ஊழியருக்கு ஆபத்துக்காலக் கொடுப்பனவு

பருத்தித்துறை, மே 20

புலோலிப நோ. கூ. சங்கத்தில் கடமையாற்றும் எண்பது ஊழியர்களுக்கு 1998 ஆம் ஆண்டிற்கான ஆபத்துக்கால கொடுப்பனவாக ஒரு லட்சத்து 89 ஆயிரம் ரூபா இம் மாதம் வழங்கப்படவுள்ளதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் செல்வி சீ. சப்பாரத்தினம் தெரிவித்துள்ளார்.

1998 ஆம் ஆண்டில் சங்கம் ஏழு மாதங்கள் இலாபத்தில் இயங்கியமையால் இலாபம் ஈட்டிய காலப் பகுதிக்கே இந்த ஆபத்துக்காலப்படி வழங்க நெறியாளர் குழு அனுமதி வழங்கியுள்ளது.

(ஐ-118)

## சமாசத்துக்கான குத்தகை; கப்பல் கம்பனி வாபஸ்

அரியாலை, மே 20

யாழ் மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவு சமாசம் 'மேக்ஸ் 'ஹண்டி' கப்பலில் பொருள்களை ஏற்றிவருவதற்கு கப்பல் குத்தகைக்கு (Charter) அமர்த்தும் வசதி வாபஸ் பெறப்பட்டுள்ளதாக அக் கப்பலின் கம்பனியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

'மேக்ஸ் ஹண்டி' கப்பலை கடந்த மூன்று தடவைகள் குத்தகைக்குஅமர்த்தி சமாசம் பொருள்களைத் தருவித்தது. நான்காவது தடவைபொருள்களை ஏற்ற கப்பல் குத்தகை வாபஸ்பெறப்பட்டிருப்பதாக சமாசத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கப்பல் குத்தகை வாபஸ் பெறப்பட்டிருப்பதால் சமாசம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சமாசத்திற்கான பொருள்களை 'ஹண்டி' கப்பலில் ஏற்றுவதற்கான இட ஒதுக்கீட்டை அது வழங்கியுள்ளது.

சமாசம் கப்பலில் பொருள்களைத் தருவித்து அதன் மூலம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருள்களை வழங்கும் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு ஒரு சில சக்திகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்பட்டு வருவதாலேயே குத்தகை வசதி ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது எனக் கருதவேண்டியுள்ளதாக சமாசத்தின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இந்தச் சக்திகள் தென்னிலங்கையைச் சேர்ந்த சிலரின் உதவியுடன் செயற்படக்கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-17)

## உணவு முத்திரை விநியோகம்

உரும்பிராய், மே 20

கோப்பாய் பிரதேசச் செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தோருக்கான புதிய உணவு முத்திரைகள் கிராம உத்தியோகத்தர்களினால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

விநியோகம் முடிவடைந்ததும் 74 "ஏ" பி' ஆகிய முத்திரைகளுக்கான உலர் உணவு விநியோகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளூடாக மேற்கொள்ளப்படும்.

கிளைகளுக்கு ஏற்கனவே உணவுப் பொருள்கள் வந்து சேர்ந்துள்ளன.

(ஐ-154)

## நல்லூர் பிரதேச பிரிவில் 4 ச. ச. நிலையங்களுக்கு தளபாடங்கள் கிடைக்கும்

வலி கிழக்கு, மே 20

நல்லூர் பிரதேச சபையின் இவ்வாண்டிற்கான மூலதன நன்கொடைத் திட்டத்தின் கீழ் இப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட நான்கு சனசமூக நிலையங்களுக்குத் தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்திற்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும்—

அரியாலை ஜெயபால சனசமூக நிலையத்திற்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும்—

கொக்குவில நேதாஜி சனசமூக நிலையத்திற்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும்—

இணுவில் காரைக்கால் சனசமூக நிலையத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களும்—

வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

திருநெல்வேலி மேற்கு ஞானக்குழந்தைகள் இல்ல பாலர் பாடசாலைக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளன.

(ஐ-180)

## மாணவருக்கு உபகரணங்கள்

புன்னாலைக்கட்டுவன், மே 20

யப்பான் உதவித் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 2 ஆயிரமாம் ஆண்டு ஜீ. சீ. ஈ. உயர் தரப் பரீட்சையில் தோற்றவுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 16 மாணவர்களுக்கு சீருடைத் துணி, புத்தகப்பை, கொப்பிகள் என்பன நாளை வழங்கப்படவுள்ளன.

(க-133)

## நாளை

வைகாசி 07

வெள்ளிக்கிழமை

திதி: சப்தமி

பின்இரவு 4 58வரை.

நட்சத்திரம்: ஆயிலியம்

பின்இரவு 3 43வரை.

கரி நாள்

சுபநேரம்: 5.52 - 7.22

ராகுகாலம்: 10 22-11.52

[பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், மே 20

கொடிகாமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார்சைக்கிளை ஓட்டிச் சென்றவரான இராமநாதன் செந்தூரன் (வயது 23) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15)

## உதயவாக்கு

இலைகளின்றி மரம் வளராது அதுபோன்றே குழந்தைகள் இன்றி மனிதன் வளர முடியாது. குழந்தைகளிடம் அன்பு காட்டாத மனிதன் மனிதனே அல்லன்.

ராஜாஜி

## நல்லூர் பிரதேசத்தில் வீதியோரம் நடைபாதை அமைக்க ஏற்பாடு

வலி. கிழக்கு, மே 20

வீதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு பிரதான வீதிகளில் நடைபாதை அமைக்கும் நடவடிக்கையை நல்லூர் பிரதேச சபை ஆரம்பிக்கவுள்ளது.

பரமேஸ்வராச் சந்தியில் இருந்து திருநெல்வேலிச் சந்தியூடாக மருத்துவபீடபின் வீதிவரையும்—

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கோண்டாவில் சந்திவரையும் —

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து நல்லூர் பிரதேச சபை வரைக்கும்—

இந்த நடைபாதையை முதற்கட்டமாக அமைக்கும் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை —

திருநெல்வேலிச் சந்தியை விஸ்தரித்து மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்றும் நிறுவப்படவுள்ளதாக பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-180)

## நெடுந்தீவில் ஆங்கில தினம்

நெடுந்தீவு, மே 20

நெடுந்தீவுப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தின விழா இம்மாத இறுதி வாரத்தில் நடைபெறும்.

மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ள ஆங்கில தினத்திற்கான ஏற்பாடுகளை மேற்படி வித்தியாலய ஆங்கில ஆசிரியர் அ. நரேந்திரன் செய்துவருகின்றார். வித்தியாலய அதிபர் சு. நடராசலிங்கம் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் தீவுப்பகுதி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜே பெனடிக்ற் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்.

(ஐ-111)

## சுன்னாகம் தெற்கில் இரு வீடுகளில் திருட்டு

சுன்னாகம், மே 20

சுன்னாகம் தெற்குப் பகுதியில் ஒரே இரவில் இரு வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கடந்த ஞாயிறு இரவு வேளை முருகேச பண்டிதர் வீதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த திருடர்கள் கத்திகள் மற்றும் சமையற் பொருள்களைத் திருடிச்சென்றனர்.

இதே வேளை—

பொலீஸ் நிலைய வீதியிலுள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் தையல் இயந்திரம் உள்ளிட்ட பல பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றனர்.

(ஐ-27)

## விதைகள் விநியோகம்

நெடுந்தீவு, மே 20

'கெயர்' ஸ்தாபனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து நெடுந்தீவில் விவசாய உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளன.

'கெயர்' ஸ்தாபனம் கௌபி, பயறு, வெண்டி, கீரை, புடோல், பாகல், நிலக்கடலை விதைகளை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் நேற்று முன்தினம் கையளித்தன. இவை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

(ஐ-111)

## பாம்பு கடித்தது

தோட்டவேலை முடித்துக் கொண்டு ஒற்றையடிப்பாதையூடாக நடந்து வந்தவர் பாம்பினால் கடியுண்ட சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தனங்களப்பு பகுதியில் இடம்பெற்றது.

பாம்பினால் கடியுண்ட இதேஇடத்தைச் சேர்ந்த என் வல்லிபுரம் (வயது 42)என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(க-117)

## வேலணையில் மின் தடை

வேலணைப்பகுதியில்கடந்த இரு வாரங்களுக்கு மேலாக மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

மின் பிறப்பாக்கியில் ஏற்பட்ட கோளாறே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ167)



## சாயி சிந்தனை

பரம்பொருளானது மனிதனிடத்துள்ள அன்பின் வடிவமாக தன் மகிமையை வெளிப்படுத்துகிறது. செல்வத்தின் மீது பற்றுதல், பெற்றோர் பிள்ளைகள் மீது பற்றுதல், வாழ்க்கைத் துணைமீது பற்றுதல் இவை யாவும் அன்பு என்ற அதே ஆலவாலையின் சுடர் பொறிகள். இறைவன்பாலுள்ள பக்தி அன்பின் மிக மேலான தோற்றமாகும்.

வழிகாட்டும் நூல்களைப் படிப்பதாலோ, சூத்திரங்களை மனனம் செய்வதாலோ அன்பை வளர்த்து விட முடியாது. இருளில் இருந்து ஒளிக்கு இட்டு செல்க என்று வேண்டுவது போல ஞான ஒளியை நாடி தவிக்கும் தவிப்பில் இருந்து அது ஆரம்பிக்க வேண்டும். அஞ்ஞானத்தில் இருந்து தப்ப வேண்டும் என்ற தாங்கொணா அவஸ்த்தை ஏற்பட வேண்டும்.

அப்போது அன்பானது தானே தளிர்த்து வளர தொடங்கும் அது உங்களை சிறுக சிறுக ரசவாதம் செய்து பசும் பொன்னாக மாற்றிவிடும், பிரஹலாதன் ஓர் அசுரன் எனினும் இறையன்பு அவனுக்கு வீடு பேறளித்தது. ஜடாயு ஒரு பறவை, துருவன் ஒரு சிறுவன், பிருந்தாவனத்து ஆயர்கள் படிப்பறிவற்றவர்கள் இருந்தும் அன்பின் ரசவாதத்தினால் அவர்கள் பெருமை பெற்று திகழ்ந்தனர்.

[ஆதாரம்:- சத்திய சாயி பேசுகிறார்] Vol. II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி பெற்றோர்

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு விமானம் மூலம் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் தொடர்ந்து உதயனில் வெளியிடப்பட உள்ளன.

இம் மாதம் 14 ஆம் திகதி வரை பாதுகாப்பு அனுமதி பெற்றோரில்சங்கானை உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தோரின் பட்டியல் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது. சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவில் அனுமதி வழங்கப்பட்டோரின் விவரங்கள் கீழே தரப்படுகின்றன.

## சாவகச்சேரி

ஏ. மகேஸ்வரி, எஸ் ஜஸ்மினா, பி. சிசிலியம்மா, வி. சாதுநாதன், எஸ். பவாநிதராசா, எஸ். பவாநிதராசா, பி. பாலேந்திரன், எஸ்.பவாநிதராணி, ஆர். கந்தப்பு, கே. ரங்கநாதன்.

எஸ். சிவகாமி, எம். அருணாசலம், வி. ஆனந்தராஜா, எஸ். ரஞ்சிதமலர், பி.இ விமலதாசன், கே.துரைராஜா, ஆர். பூரணம், ஆர். மதீஸ்வரன், எஸ் கந்தையா, எஸ். விதுரன்.

கே. துஷ்காந்தன், எஸ் பொன்னம்பலம், ஏ சிவசம்பு, ரி.செல்லாச்சி, கே.சிவராசா, எஸ் பாலசுந்தரம், எம். ராசரட்ணம், எஸ், ராசரத்தினன், எஸ். சுதர்சன், வி. தங்கவேலு.

எஸ்.சிவகொலோனோலா, பி. பார்த்தீபன், வி. பாலசிங்கம், கே துதீசன், பி.சிவஞானம்,எஸ் பாக்கியநாதன், பி. கஜதீபா, எஸ். நந்தகுமார், கே. குணபாலசிங்கம், ஆர். குமணன்.

எஸ். பிரணவன், எஸ். சினேசா, பி. வி. தம்பித்துரை, எஸ். சத்தியசீலன், எஸ். ராசரத்தினம், எஸ். பொன்னம்மா. எஸ். கவிதா, எஸ். பிறிமலாதேவி, எஸ். செல்வராஜா, எஸ். சுவர்ணமுகி.

எம். நாகேஸ்வரி, கே. கனகசிங்கம், பி. சுலோசனா, வி. பரந்தாமன், கே.வேலுப்பிள்ளை, எஸ். ஜெயசுதன், எஸ். ஸ்ரீசந்திரகாந்தன், எஸ். ஜே. ஜெயராணி, எஸ். செல்வரத்தினம், கே சதாசிவமூர்த்தி.

எஸ். சதாசிவம், எஸ் தங்கராஜா, எஸ். சுதாஜினி, கே. சிவகுமாரன், எஸ் சசிதேவி, வி. சிதம்பரானந்தர், எஸ். ஞானச்சந்திரன், கே. பிரபாகரன், ஆர். காசிநாதன், எஸ். ஸ்ரீதரன்.

எஸ். சுபத்திரா, எஸ். சுபேந்திரா,எஸ்.புஸ்பராணி, எம். ஜெயந்தன், ரி.கனகரட்ணம். கே. பாக்கியம், எஸ். கலிஸ்ரா, ஆர். ரவிநாத். என். செல்லையா, ஆர். சிவகுமார்.

எஸ். தர்மிகா, கே. நவரட்ணம், ரி. நாகலிங்கம், டாக்டர் எஸ். பஞ்சராஜா, சி. தவராஜா, கே. சுப்பிரமணியம், கே. சதாசிவமூர்த்தி, எஸ். கந்தசாமி, எஸ். புஜிதாம்பாள், பி. செந்தில்நந்தன்.

ஜே. ஸ்கைலா. ஆர் நேசம்மா, எம். ஜேபெரின்பநாயகம், சி. விஜயலக்ஷ்மி, ரி. ஜீவ்றி, எம். அனோஜன், கே. கந்தசாமி. ரி. மலர்விழி. எஸ் தில்லைவனராஜா, எஸ். ராமச்சந்திரன்,

நிமலாதேவி, கே பத்மாவதி, கே. கமலநாதன், பி. சோசேகரன், எஸ். கௌரி மனோகரி. எஸ். முரளீதரன், கே. ராஜதுரை, வி. ஞானசோதி. ஆர். கனகசபாபதி, கே. கனகசபாபதி.

ரி. வேலுப்பிள்ளை, எஸ், கௌதீபன். எஸ். உதயசாந்தன், பி. சின்னத்தம்பி, டபிள்யு சின்னத்தம்பி, கே. எஸ். சிதம்பரப்பிள்ளை, கே.கமலேஸ்வரி, இ. வி. வல்லிபுரம், ஏ. தேவபரன், எஸ், சின்னத்துரை,

ரி. அன்னபூரணம், ஏ. தங்கராஜா, ரி. தர்மலிங்கம், எஸ். தில்லைநாதன். எஸ். பொன்னம்மா, எஸ். ராஜரட்ணம், ரி. தேவஸ்தான், எம். சுப்பிரமணியம். வி. சிவவதனி, ஆர். உமாராணி.

கே. மகேந்திரராஜா, எம். சிவஞானம், எம். ராசகுமாரி, எஸ். சர்வானந்தன், எம். தியாகராஜா, ஜி. செல்வரத்னம். கே. சிவகுமார், கே. மீனாட்சி, எஸ். சிவராசா, ஆர். துசிகரன்.

எஸ். நிரிஜா, கே. றகுநாதன். எஸ். ஜெகதீசன். ஜி. குணசிங்கம், ஏ சுப்பிரமணியம். ஏ. பெருமாள். பி. ஞானமலர், ரி. அந்தோனியாப்பிள்ளை, ஆர்.ரி. நவரட்ணம். எஸ். கதிர்சி,

ஆர். நிதுசனா, ஜே. அனுஷா, ஆர். கேதாரகௌரி, கே. பரராஜசிங்கம், எஸ். சசிகரன், எஸ். சுதந்தினி. டாக்டர் எஸ் ராஜபூபதி, வி விசுவநந்தன். ச, தோமஸ், பி. சின்னப்பா.

கே. சின்னப்பா, ஜே. அஜந்தன், எஸ் மகேந்திரராஜா, ஜே. அசெம்ரா, எம். மல்லிகாதேவி, எம். மதனகுமார், ஆர். ரட்ணம், எஸ். ராசையா, எஸ். பிரதீபன், எஸ். பிரிசாந்தி.

எஸ். பிரசாந்த். எஸ். கனகம்மா, கே. பாலசுந்தரம். கே. ஸ்ரீகௌரி, எஸ். மகேஸ்வரி, பி. சந்திரமௌலீசன், கே. மகேஸ்வரன், கே. குகாமினி, எஸ். சக்திவேல், ஏ. செல்லத்துரை.

கே. செல்லத்துரை. ஆர். ஜெயகுமாரி, ஆர். செல்வராணி. என் சசிகரன். ரி. நாகேஸ்வரி, ரி. நாகேஸ்வரி. எஸ். சுந்தரலிங்கம், கே. சதீஸ்குமார், கே. சுலோஜனா, எஸ். தியாகராஜா,

ஆர். திருஞானசம்பந்தன், ஜி ஞானசௌந்தரி, ஜி. ரோகினி. ஜி. அன்னம்மா, பி. துஷ்யந்தி. பி. பாலசுந்தரம். கே. எஸ். கணபதிப்பிள்ளை, ரி. ராசாத்தியம்மா, எஸ். நாகேஸ்வரன், எஸ். தவராணி.

என். சற்குணராஜா, வி. சிவசுப்பிரமணியம், எஸ். உதயச்சந்திரிகா, எஸ். சரஸ்வதி, கே. நடராஜா, ரி. மோகனாம்பிகை, ஏ. ரட்ணகுமார், ஆர். கருணாகரன், ஜே. யோகநாயகி, பி. றூபா.

எஸ் குமாரசுவாமி, எஸ். நிலாசனி, எம். திலகநாதன், ரி ஸ்ரீரங்கன். வி சின்னத்தம்பி, எஸ் மகேஸ்வரி, எஸ். தேவயோகம், எம். பத்மநாதன் ஏ. அபிராமி, தான்சன்,

ஏ. அழகராஜா. எஸ். சுதர்சினி. எஸ் வசந்தகுமாரி, கே.கோவிந்தராஜா. பாலகௌரி, வி.ஜோகநாதன் எஸ். வீரசுதாகரன், எஸ், செல்லம்மா, ஏ. ஸ்ரீகாந்தராஜா.

பி. இந்திரன், ஆர். சந்திரகுமார், சி. கிரிசா, சி. ஜசோதா, சி. செல்வறேனுகா, எஸ். சந்திரகுமாரன், ரி. ஆறுமுகம், ரி. தர்மினி, பி. விக்கினேஸ்வரன், எஸ்.மார்க்கண்டு,

எஸ். செல்வரட்ணம், கே. சின்னம்மா, கந்தசாமி, எஸ். மாலினி, எம். குமாரசிங்கம். என். ஐங்கரன். பி. நடராஜா, என். சுபாஜினிதேவி, எஸ். கோணேசன், எஸ். மதிரூபன்,

டாக்டர் எம்.சிறீ ஸ்ரீகாந்தன், கே. ஆறுமுகம், ஏ. குமுதினி, ஆர். சர்வேஸ்வரன், ரி. பாலசுந்தரம், கே. சந்திரசேகரம், எஸ். சாந்தினி, சசிகரன், வி. சிவசாந்தினி, வி. சிவசுமித்திரன்.

வி. சிகதராசினி, வி. புவனேஸ்வரி, எம். எல். வி. விசுவநாதன், எஸ். செல்வராஜா. எஸ். பாக்கியராணி எஸ். தர்மேந்திரன், எஸ். ராஜேஸ்வரி, ஏ. சிவராணி, ஏ. மகேஸ்வரி, எஸ். பவளம்மா.

ரி. சிதம்பரேஸ்வரி. எஸ். துரைசாமி. பி. கஜதீபன், எஸ். பரம்சோதிநாதம், எஸ். செல்வராஜா, எஸ், அன்னலட்சுமி, ரி. சுப்பிரமணியம், எஸ். ஸ்ரீதரன், டி. பார்த்திபன், பி. லதா.

எஸ். சகுந்தலாதேவி, ஆர். தர்மகுலசிங்கம், எஸ். சகுந்தலாதேவி, ஆர். தர்மகுலசிங்கம், கே. ஈஸ்வரி, கே. சிவப்பிரகாசம், ரி. திலீபன், கே. வைதேகி, கே. சின்னம்மா, கே. கணேசபிள்ளை.

ஜே. சந்திரகுமார், பி. தீபிகா, எஸ். செல்லக்குட்டி, எம்.பத்மநாதன். ஏ மல்லிகாதேவி, கே மகாலிங்கம், ஏ. பிரேமாவதி, என். சுந்தரலிங்கம், ஏ.ராமலிங்கம், ஏ. ராமலிங்கம்,

வை. செந்தீபன், எஸ். சாருலதா, எஸ். கோவிந்தசரம், ஏ. பிரேமாவதி, பி. மௌலிகா, கே.வடிவழகன், எஸ். செல்வராசா, கே. படைவீரசிங்கம், எஸ். புஸ்பமலர், எஸ். ரட்ணம்,

கே. சுப்பிரமணியம். வி. செல்லத்துரை, ஆர்.செல்லத்துரை, என். செல்லத்துரை, ஜி. திலீப், ஜி. கமலேஸ்வரி, டபிள்யு. குணாளன், ரி. மகேந்திரன், வை. ஜெயநேசன், எம். சயந்தன்,

எஸ். சர்மா,எஸ். சிவபாதசுந்தரம், எஸ். யோகம்பிகை, வி. நாகராஜா, என். நாகராஜா, கே பிரபு, ஏ. செல்வரட்ணம், கே. புஸ்பலீலாவதி, பி. கந்தசாமி, எஸ். கத்தபதி.

கே. விக்கினேஸ்வரன், கே. சுப்பிரமணியம், பி. சுப்பையா, வி.சிங்கராணி, எஸ். புவனேஸ்வரி, கே. செல்வராணி, பி. இன்பேஸ்வரன், எம். பரமேஸ்வரன், எஸ். துசஜந்தன், வி.வி.முருகையா.

பி. சற்குணராஜா, என். நாகரட்ணம், ஆர். சாந்தலக்ஷ்மி, எஸ். கேமலதா. வி. சின்னம்மா, ஏ. எம்.சச்சிதானந்தா, எஸ்.குமாரசாமி, கே. கோபெரும்தேவி, வி. தம்பிராஜா. பி. ராஜமோகன்.

பி. இந்திராதேவி, எஸ். கலாவதி, எஸ். ராமநாதன், வி. குணரட்ணம், எம். ஆச்சிப்பிள்ளை, கே. மாணிக்கம், கே. சங்கரப்பிள்ளை, கே. கோகுலன், பி. தனுஜா, ஜே. ஏ. தயாகரன்.

சி. தயாகரன், ஏ. ஞானபாஸ்கரன், வி. ஐயாத்தம்பி, எஸ்.பாக்கியநாதன், எஸ். அகலியா, கே. புஸ்பாகரன், கே. பேரம்பலம், என். சிவரூபன், என். பரமசாமி, எஸ். சங்கவி.

எஸ்.பூமாதேவி, எஸ்.செல்வேஸ்வரன், கே. பிரதீபா, கே.பிரபாகரன், கே.ராஜேஸ்வரி, கே. கிருபானந்தன், கே.தனபதி, கே.நிகேதனன், கே. சிவபாக்கியம், வி. அருந்ததி.

வி. பராசக்தி, எஸ். சிவசுப்பிரமணியம், வை.நாகேந்திரராஜா, கே கிருத்திகன், எஸ்,நேசகுமாரி, எஸ்.சர்வானந்தன், எஸ். சிவயோகம், கே. தவராஜா, பி. சுரேஸ், எஸ். பாமிலா.

எஸ் சுகந்தி, பி கந்தையா, பி கந்தசாமி, எஸ். ராஜரத்தினம், என். பாலசிங்கம், எஸ். [illegible] எஸ். சிவாநந்தன், ஜி. சிவமலர், என். கணேஸ்வரன், எம். அன்னம்மா.

பி. சரசு, எஸ். சுதந்தினி, கே. செல்லையா, எஸ். கலைவதனி, எஸ். சந்திரராஜா. வி. சாளியோல், மரியராணி, ஏ. ஏ. வில்வராஜசிங்கம், பி. சரவணமுத்து, கே. சச்சிதானந்தன்,

பி. பிரான்ஸிஸம்மா, வி. ராஜேஸ்வரி, ரி. வீரபத்திர ஐயர், பி. பி. பதயசந்தர், ஆர். ராஜபவான், ஏ. சற்குணதேவி, எல். றீகன், பி. லயன், வி. மோகனகுமார், எஸ். சண்முகலிங்கம்.

ஜி. பரமசாமி, கே. சயந்தன், பி. பரமசாமி ஐயர், எஸ். மகேஸ்வரி, பி. பாலேந்திரம், ரி. விஜிதா, வி. பூலோசிங்கம், பி. கருணாகரன், கே. தவராஜா. ரி. பொன்னம்பலம்.

எம். குணபாலசிங்கம், ரி. ஏ. பமேலா, எஸ். என். வெற்றிவேலு, கே. சிவனந்தன், கே. பூங்கோதை, கே. சோமசுந்தரசர்மா, செல்வம், எஸ். அம்புலிங்கம், எஸ். சத்தியசோதி, ஆர். கந்தசாமு.

என். கந்தசாமி, ஏ. நடேசன், பி. ராசையா, கே. கார்த்திகேசு, எஸ். குமாரசாமி, ரி. கஸ்தூரி, எஸ். மாணிக்கம், கே. தர்மினி, பி. கந்தையா, எஸ். கந்தையா.

எஸ். ஆசைமுத்து, எஸ். ராஜபூபனி, கே. திருஞானசம்பந்தமூர்த்தி, ஜே. தவலிங்கம், எஸ். புனிதவதி, வி. சிவசம்பு, ஈ. கனகரட்ணம், வி. தவலிங்கம், எஸ். குமாரசாமி, எஸ். சுப்பிரமணியம்.

ஏ. பத்மராணி, எஸ். சாரங்கன், எஸ். றுக்மணிதேவி, எஸ். சுகந்தினி, ஜே. பாலச்சந்திரன், ரி. தமிகா, ரி. கௌரசங்கன், ரி. ராஜபூபதி, பி. சோபிகா, எஸ். வரதலிங்கம்,

ஏ. பொன்னுக்கோன், பி. சிவனேஸ்வரி, ஏ. எம். மரீனரகிரிஸ்ற், என். வைத்திலிங்கம், எம். எம். தர்மலிங்கம், எஸ். கியூ. அன்ரனி, எஸ். நிர்மலரட்ணம், எஸ். ஜோகானந்தன், கே. இந்திரா, எஸ். சியாம்,

ஏ. சுரேஸ், கே. மகினோல்ட், பி. எஸ் குணரட்ணம். எஸ். நடராஜா, கே. வி. விமலராஜன், எம். நடராசா, ஜே. பிரசன்னா, வி லதா, ரி. குலசிங்கம், எம். எஸ். குணரட்ணம்.

எஸ். சண்முகதாசன், கே. சண்முகநாதன், வி நகுலேஸ்வரி, வை. ஹரிராமசெல்லு, ஏ. ஜோகேந்திரன், கே. ஜோகேஸ்வரன், வை. சறோஜாதேவி, ரி. கிருஷ்ணசாமி. என். வசந்தாதேவி, எஸ். சர்வானந்தம்.

[வளரும்)

## ஒபடகே யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், மே 20

வடபகுதி மீள்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் என். கே. ஒபடகே அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சில தினங்கள் தங்கியிருக்கும் இவர் அதிகாரசபையின் திட்டங்கள் தொடர்பாக அரச அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார். (ஐ-5)

## கொடி வாரம்

யாழ்ப்பாணம் இந்து இளைஞர் பேரவை இவ் வாரம் கொடித்தின வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இடர்ப்படும் மக்களுக்கு இயன்ற வரை உதவும் நோக்குடன் பாடசாலைகள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றிடமிருந்து பேரவையினர் நிதியுதவி கோரியுள்ளனர்.

நிதியுதவி வழங்குவோர் ஜூன் மாதம்15 ஆம் திகதிக்கு முன் பேரவைப் பொருளாளரிடம் ஒப்படைக்குமாறு அதன் தலைவர் வே. கெ. தனபாலன் கேட்டுள்ளார். (ஐ-152)


## மரண அறிவித்தல்கள்

### M. W. செல்வத்துரை

''காந்தி ஆச்சிரமம்'', உடுவிலைச் சேர்ந்த M W செல்வத்துரை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

இவரது நல்லடக்கம் கொழும்பில் நடைபெற்றது.

தகவல்:
நா. தேவநேசன்,
எஸ். ஆர். இன்டஸ்றீஸ்,
சங்குவேலி.

[65883]

திருமதி

### கனகரட்ணம் வள்ளியம்மை

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாயைச் சேந்த திருமதி கனகரட்ணம் வள்ளியம்மை 18—05—99 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் அவர்களின் மனைவியும் சுந்தரலிங்கம் (சண்டிலிப்பாய்), மகேஸ்வரி (கனடா), சிவபாதசுந்தரம் (கனடா), திருமதி கமலேஸ்வரி—மன்றுனாடி (கொழும்பு), பஞ்சலிங்கம் (மானிப்பாய்), மகாலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மாவதி, காலஞ் சென்ற பஞ்சலிங்கம், பாலலோஜனி, மன்றுளாடி, கியாமினா, திலகராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுசியா, கலாஜோதி (ஜேர்மனி), கனடாவிலுள்ள மதிவதனி, பத்மவதனி. மோகனவதனி, ராதிகா, றேனுகா, மேனகா, கங்கா, துஷாரா (மொறட்டுவ பல்கலைக்கழகம்), தெய்வீகன், கலைவாணி, திருக்குமரன், மயூரன், டிலான் ஆகியோரின் பேத்தியும் கனடாவிலுளள றெசான், டனா, சாயினா ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் 24-05-99ல் நடைபெறும் இவ்வறிவித்தல்களை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''தெய்வீகம்',
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
க. பஞ்சலிங்கம்.
(மகன்)

(65877)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**படை...**

(முதலாம் பக்கத் தொடர்)

மாந்தை மேற்குப்பகுதியில் அடம்பன், பாப்பாமோட்டை இத்திகண்டல் கண்ணாட்டி உட்பட 23 கிராமங்கள் உள்ளன. இந்தப் பிரதேசங்களை நோக்கி இராணுவம் முன்னேற முயன்றால் அப்பிரதேச மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி அருகிலுள்ள தேவாலயங்களிலேயே தஞ்சமடைவார்கள்.

எனவே இராணுவம் முன்னேறும் போது ஷெல் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்—

விமானத் தாக்குதல்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும்—

முடிந்தால் விமானத்தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் — என்றும் அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

(இ-6 21)

**லங்கா...**

(முதலாம் பக்கத் தொடர்)

ஏற்கனவே ரிசெட் பெற்றவர்களுடன் காங்கேசன் துறைக்கு அழைத்துச்செல்லப்பட்டு திருமலைப பயணத்துக்கு அனுமதிக்கப்படுவர் எனவும் —

யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுப் பிற்பகல் 4 00 மணியளவில் ஆயிரத்து 294 பயணிகளுடன் லங்கா முடித்த கப்பல திருமலையில் இருந்து காங்கேசன் துறை நோக்கிப்புறப்பட்டது. இன்றுகாலை இந்தக் கப்பல் காங்கேசன்துறை வந்து சேரும்.

மன்னார் மற்றும் மடுப் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் இருந்து அழைத்து வரப்பட்ட அகதிகளே இந்தக்கப்பலில் அடங்குவர்.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

(நயினாதீவு)

நயினாதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆறுமுகம் கணபதிப்பிள்ளை 19–05–99 இல் காலமானார்.

இவர் ஆறுமுகம் சின்னாச்சிப்பிள்ளையின் கனிஷ்ட புதல்வனும் கனகம்மாவின் அன்புக் கணவரும், இராமலிங்கம் - நல்லம்மாவின் அன்பு மருமகனும் தவேஸ்வரி (ஆசிரியை சுவிஸ்), கேசுவராணி (இத்தாலி); கேதீஸ்வரன் (இத்தாலி). பாலேஸ்வரன் (கணேச வித்தியாசாலை, நயினாதீவு) ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையாரும் மகேஸ்வரன் (சுவிஸ்), தியாகேஸ்வரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20–05–99) வியாழன் மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல் சல்லிபரவை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பி சி. ஆ. தருமலிங்கம்
கா இ சண்முகலிங்கம்

7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

[65911]

## ஆறுமுகம் இளமுருகன்

[ விரிவுரையாளர். பொறியியல்பீடம் - பேராதனை ]

சோடக்கன் இளவாலையைப் பிறப்பிடமாகவும் 113, C/2, பொத்துவில் விகாரை வீதி, அங்கோனவல பேராதனையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இளமுருகன் 18 – 05 – 99 இல் காலமானார்.

அன்னார் நிர்மலாவின் அன்புக் கணவரும்; மீனநயனியின் அன்புத் தந்தையும், ஆறுமுகம் - சிவஞானாம்பிகை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், இளையதம்பி ( ஆயா மாமா ), பார்வதபத்தினி (கோப்பாய் தெற்கு, பழைய டிஸ்பென்சரி வளவு, ஆறுமுகத்தின் மகள் ) தம்பதியினரின் அன்பு மருமகனும், இளங்கோ ( நியூசிலாந்து ) அவர்களின் அன்புச் சகோதரனும், சிவநேசன் ( ஜேர்மனி ), சிவபாலன் ( சன்பீம் விளம்பரச் சேவை, கொழும்பு ) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22 - 05 - 99 சனிக்கிழமை பேராதனையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
நா கனகசுந்தரம் ( பெரிய தந்தை )
நா. கந்தையா ( பட்டையடி, இருபாலை )

11, சுவாட்ஸ் வீதி,
சுண்டிக்குளி.

(65909)

## கந்தையா கணபதிப்பிள்ளை

உசன் மிருசுவிலைச் சேர்ந்த கந்தையா கணபதிப்பிள்ளை நேற்று (19-05-99) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும் பொன்னையா (இளைப்பாறிய கமத்தொழில் உத்தியோகத்தர்). செல்லத்துரை (உசன), இராமலிங்கம் (இளைப்பாறிய இறைவரி உத்தியோகத்தர்), சின்னத்துரை (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அழகம்மா, கருணேஸ்வரி, ஸ்கந்தகுமாரி, மனோறஞ்சிதம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ரேணுகா (பிரான்ஸ்), விஜிதா (U S A), வாகீசன் (3 ஆம வருட கலைப்பீட மாணவன், யாழ் பல்கலைக்கழகம்). அபிராமி, நவநீதன். செந்தூரன் (மாணவன், இராமநாதன் ம. வி. உசன்), சிவராமி (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கார்த்திக் (U.K) ஆகியோரின் அன்புப் பேரனும் அரிணியின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 9-30 மணியளவில் உசனில் நடைபெறும்.

தகவல்:
வாகீசன் (பேரன்)

கோப்பாய் மத்தி;

(சி/76 05)

# சமய சந்நிதிகளில்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயத்தின்வருடாந்த உற்சவம இன்றுகொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

தொடர்ந்து 10 நாட்கள் இடம் பெறும் உற்சவநிகழ்வுகளில் எதிர்வரும் 28 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-15)

★ ★ ★

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 11 நாட்கள் இடம்பெறும் உற்சவநிகழ்வில் எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும. (க-30-15)

★ ★ ★

நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று காலை 8-00 மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் மாலை 5-30 மணி முதல் 6-30 மணி வரை விசேட நிகழ்ச்சிகள் இடம்பெறும். (இ-6)

★ ★ ★

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ சந்திரசேகர விநயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 11 00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 7-00 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 7-30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-4)

★ ★ ★

வடமராட்சி அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரமபமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும். (க-173)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்

உற்சவ காலங்களில் தெய்வீகப்பேருரை நடைபெறவுள்ளது. (க-173)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம் பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயிலின் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10. 00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10 00மணிக்கு தேர்த் திருவிழாவும், நவசக்தி அர்ச்சனையும் மறுநாள் காலை 10.00 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

(க-30)

★ ★ ★

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமைகாலை 11. 00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 10 00 மணிக்கு தீர்த்தோற்சவமும்இடம்பெறும். (க-30)

★ ★ ★

நாரந்தனை கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 12 நாள்கள் இடம்பெறும் இந்த உற்சவ நிகழ்வில் 29 ஆம் திகதி தேர், தீர்த்த உற்சவங்கள நடைபெறும். (க-15)

★ ★ ★

வரணி கும்பிட்டான்புரம் கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (க–15)

★ ★ ★

வட்டுக்கோட்டை சித்தன் கேணி கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 11 நாள்கள் இடம்பெறும் இந்த உற்சவத்தில் 29 ஆம் திகதி தேர் உற்சவம்நடைபெறும் (க-15–30)

★ ★ ★

புங்குடுதீவு பெருங்காடு கிரௌஞ்சியம்பதி கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

உற்சவ காலங்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். (க-167)

★ ★ ★

அனலைதீவு அருள்மிகு ஸ்ரீ மனோன்மணிஅம்பாள் கோயிலின் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். [க-30]

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம் பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் கோயிலின் வருடாந்த அலங்காரத்திருவிழா இன்று வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10-30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மாலை 3-30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

[க-30]

★ ★ ★

கைதடி திருவருள்மிகு வீரகத்திப்பிள்ளையார் கோயில் முதலாய ஸ்ரீ பருவதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி கோயிலின் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு நாள் நடைபெற உள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 30மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (க-74-ரி)

★ ★ ★

உரும்பிராய் ஸ்ரீ பர்வதபத்தினி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்து நாட்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (க-154)

## புளொட் மற்றும் ரெலோ..

[முதலாம் பக்கத் தொடர்]

இயக்கங்களுக் கிடையேயான மோதல்கள் கொலைகளாக உருவெடுத்திருப்பதை ஈ. பி. டி. பி. அமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்த இயக்கங்களுக்கிடையிலான மோதல்கள் கடந்த காலங்களில் பற்பல வடிவங்களில் வவுனியாவில் தலைவிரித்தாடிய போதும் அவை காலப்போக்கில் அடங்கி விடுமென்ற நம்பிக்கையினால் எமது கட்சி இந்த விடயம் தொடர்பாக பகிரங்கமாக விமர்சனம்செய்வதை தவிர்த்து வந்தது.

ஆயினும் அண்மையில்நடைபெற்ற சம்பவங்கள் நிலைமை மேலும் மோசமடைந்து விடுவதை எடுத்துக்காட்டுகிறது.

தமிழ் பேசும் மக்களின் விடிவுக்காகவென்று ஆரம்பித்த இயக்கங்கள் பல காலப் போக்கில் சுயநல அரசியலுக்காக தமது மக்களையே பலிக்கடாக்களாக்கிக் கொண்டிருப்பதை நாம் இன்று காண்கின்றோம். இயக்கங்களின் இவ்வாறான நடவடிக்கைகளுக்கும் புலிகளின் படுகொலைகளுக்கும் எந்தவித வேறுபாடுகளும் இருப்பதாக நாம் கருதவில்லை.

தமிழ் பேசும் மக்களுக்காக இன்று நாம் செய்யக் கூடிய ஒரே ஒரு கைங்கரியம் அந்த மக்களின் விடிவுக்காக ஒன்று சேர்ந்து செயற்படுவதே.

சகோதரப் படுகொலைகளால் அநியாயமாகத் தமது உயிர்களைப் பலி கொடுத்த அனைவருக்கும் எமது இதய அஞ்சலியையும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்படி அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-6)

யா/ விடத்தற்பளை

## கமலாசனி வித்தியாலய நன்றிகளும் பாராட்டுகளும்

1998 ஆம் ஆண்டு க. பொ. த. (சா/த) பரீட்சையில் முன்னணியில் திகழ்கின்ற

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வே. சுபாஜினி | — | 7D | C | — |
| 2. | சீ. ஜெயதீபன் | — | 7D | — | — |
| 3. | மா. மதுரா | — | 7D | — | — |
| 4. | கு. ஜெயபோதினி | — | 5D | 2C | — |
| 5. | செ. நந்தினி | — | 4D | 3C | — |
| 6. | நா. தயாசீலன் | — | 4D | 2C | S |

ஆகியோரையும் இவர்களுடன் க. பொ. த. (உ/தர) வகுப்பிற்குத் தகுதிபெற்ற ஏனைய 19 மாணவர்களையும் 1999 ஆம் ஆண்டு கோட்டமட்ட மெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டி இந்த வித்தியாலயத்திற்கு 3 ஆவது இடத்தைப் பெற்றுத்தந்த

1. செ. நிஷாந்தினி
2. கோ. கோமதி
3. அ. அனுஷிகா
4. மு. கிருஷ்ணகாந்தன்
5. சி. சிவறூபா
6. வீ. கலைறூபி

ஆகியோரையும் பாராட்டுவதோடு இம் மாணவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை நவில்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(சி/7602)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)
கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து வந்த வவுனியா ஜொஜ்ஜுகளில் தங்கியிருந்த மக்கள் உணவுக்குத் திண்டாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

நேற்று வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்ட ரெலோ அமைப்பின் வவுனியா தனபதி குகனின் சடலம் வவுனியா வயிரவப் புளியங்குளத்தி லுள்ள ரெலோ அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்னர் சடலம் வவுனியா பஜார் வீதி, மன்னார் வீதி வழியாக வேப்பங்குளம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதிக் கிரியைகள் நடத்தப்பட்டன.

இறுதி மரியாதையாக ரெலோ அமைப்பினர் வானத்தை நோக்கி 21 துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இறுதிக் கிரியைகளை முன்னிட்டு வவுனியாவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலீஸாரும் படையினரும் கூட்டாகக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

(இ-6-164)

## மின்கம்பம்...

(முதலாம் பக்கத் தொடர்)
ஈடுபட்டிருந்த போது குறிப்பிட்டளவு தூரம் உயர்த்தப்பட்ட மின்கம்பம் திடீரென தவறி ஊழியர்கள் மீது விழுந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருச்செல்வம் அகிலன் (வயது 19) என்பவரே உயிரிழந்தவராவார். புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த பொன்னம்பலம் சந்திரகுமார் (வயது19) என்பவர் காயமடைந்தார். அவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-6-15-139)

## கிரனேட்...

(முதலாம் பக்கத் தொடர்)
கிரனேட் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன எனவும் —

பின்னர் அப் பகுதியைச் சுற்றி வளைத்த படையினர் வீடு வீடாகத் தேடுதல் மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை முகமாலைப் பகுதியில் உள்ள காவலரண் ஒன்றில் நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார் என மற்றொரு தகவல் தெரிவித்தது. (இ-7-31-117)

## கிரிக்கெட் ...

(முதலாம் பக்கத் தொடர்)
ஆபிரிக்க அணி துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த சமயம் திடீரென மைதானத்தின் மேல் தோன்றிய இந்த விமானத்தின் வால் பகுதியில் ''தமிழர்கள் கொலை; கிரிக்கெட் வேண்டாம்'' என்ற வாசகம் அடங்கிய அட்டை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. இந்த அட்டையுடன் விமானம் மைதானத்தைச் சுற்றிப் பலதடவைகள் வட்டமிட்டுப் பறந்தது.

(இ-6)

## தப்பி...

(முதலாம் பக்கத் தொடர்)
துரத்திச் சென்றதாகவும்—அப்போது படையினர் மீது கிரனேட் வீசப்பட்டதாகவும்—

இரண்டு படையினர் அதில் காயமடைந்ததாகவும்—

பின்னர் அப்பகுதியில் தேடுதல்கள் நடத்திய படையினர் அங்கு விட்டுச் செல்லப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றில் இருந்து குண்டு ஒன்றை மீட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

[இ-6-117]


### கடை விற்பனைக்கு

யாழ். நகரின் மத்தியில், சத்திரத்துச் சந்தியில் கே. கே. எஸ். வீதி 31 ஆம் இலக்கத்தில் (புதிய இலக்கம் 167) அமைந்துள்ள 6.45 குழி விஸ்தீரணமுடைய கடை விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

எஸ். நிரஞ்சன் நந்தகோபன்
411, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7607)



### அதிரடி மலிவு விலையில்

ஆடைகள் யாவும்

விற்றுத் தீர்த்தல்

**ரம்மியாஸ்**

**சில்க்ஸ்**

121, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/7604]



### பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**A\L 2000**

பொருளியல் — S. வரதராஜன் B.A (Hons)

- உற்பத்தி, செலவுக் கோட்பாடுகள்
- சந்தையமைப்புகள்

**ஆரம்பம்: 22-05-1999**
சனிக்கிழமை 8-00 மணி

கவனத்திற்கு

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொருளியல் வகுப்புக்கு புதிய அனுமதிகள் 22-5-99 தொடக்கம் 31-5-99 வரை வழங்கப்படும்.

(65870) — நிர்வாகி



எமது பிரமிட்
வீடியோ CD
வெளியீடுகள்!

- பூமகள் ஊர்வலம்
- எதிரும் புதிரும்
- கணேஸ்
- திரிசூலம்
- நீதிக்கு தலைவணங்கு

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/7606)



### ராஜா தொலைத் தொடர்பு சேவை

99, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

இன்று 20 - 05 - 1999 வியாழக்கிழமை காலை
7-41 மணி முதல் 8-37 மணிவரையுள்ள சுபவேளையில்
ஆரம்பிக்கப்படவுள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு தொடர்புகளை
உடனுக்குடன் குறைந்த கட்டணத்தில்
பெற்றுக் கொள்ள

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உள்நாடு:- 021 - 2919
வெளிநாடு:- 0094 - 21 - 2919

- உரிமையாளர்

99, பருத்தித்துறை வீதி,
(குமார் ரயர் வேக்ஸ் அருகில்)
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(65907)



# தர்மி கொமினிகேசன்

### சாவகச்சேரி
### நியூ செலக்ஸன் தொலைத்தொடர்பு நிறுவனத்தினர்

மீசாலைப் பகுதி மக்களின் நலன் கருதி
**மீசாலை உப தபால் நிலையத்துக்கு அருகில்**
**தமது கிளை நிறுவனமான**

## தர்மி கொமினிகேசன்

என்னும் நிலையத்தினை நேற்று (19-05-99) ஆரம்பித்துள்ளனர் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு
மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**நியூ செலக்ஸன் தொலைத்தொடர்பு**
**நவீன சந்தை** (மேல் மாடி),
**சாவகச்சேரி.**

**தர்மி கொமினிகேசன்**
**இல: 629, கண்டி வீதி,**
**மீசாலை.**



தொலைபேசி இல: உள்ளூர் 070 — 212253
வெளிநாடு 0094 — 70 — 212253

உள்ளூர் 070 — 212482
வெளிநாடு 0094 — 70 — 212482

விளம்பர அன்பளிப்பு:

**குமார் விற்பனை நிலையம்**
இல: WB 08, சந்தை (உட்புறம்), சாவகச்சேரி.

(சி/7601)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org